# பொருளாதாரஅபிவிருத்தியில் நுண்பாகநிதியிடலின் பங்களிப்பு: கோறளைப்பற்றுதெற்குபிரதேசசெயலாளர் பிரிவுகுறித்த ஒருஆய்வு

**T. Sasivathani**

*Department of Social Science, South Eastern University of Sri Lanka.*

**Keywor: -***பொருளாதார அபிவிருத்தி,நுண்பாகநிதி,உற்பத்தித் திறன்,கிராமியத் துறை*

### ஆய்வின் அறிமுகம்

உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு நாடும் பொருளாதார அபிவிருத்தியை அடைவதையே நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தும் ஓர் அபிவிருத்திக் கூறாக நிதியியல் துறை காணப்படுகின்றது. குறைவிருத்தி நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் அபிவிருத்திக் கருவியாக நுண்பாக நிதியிடல் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நுண்பாக நிதியிடல் என்பது பொருளாதார ரீதியாக செயலூக்கம் கொண்ட, குறைந்த வருமானம் பெறுகின்றவர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்படும் சிறியளவிலான நிதிச்சேவைகளையே(Amarthya Sen,1998)குறிக்கும். இவ்வெண்ணக்கரு 1960 களிலே ஆரம்பித்தாலும் 1980 இன் பின்னரே வளர்ச்சியடையத் தொடங்கியது. நுண்பாக நிதியிடலானது ஏழை மக்களின் சமூக, பொருளாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு வறுமையின் நச்சு வட்டத்தை நீக்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக குறைவிருத்தி நாடுகளில் அதிகளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனவே பொருளாதார அபிவிருத்தியில் நுண்பாக நிதியிடலின் பங்களிப்பானது பிரதான இடத்தைப் பிடித்துள்ளது.

இவ்வாய்வுகோறளைப்பற்றுதெற்குப் பிரதேசத்தின் பொருளாதாரஅபிவிருத்தியில் நுண்பாகநிதியிடலின் பங்களிப்புஎவ்வாறுகாணப்படுகின்றதுஎன்பதனைப்பிரதான இலக்காகக் கொண்டுள்ளது.ஆய்வுப் பிரதேசத்தின் சமூகப் பொருளாதாரநிலைமைகளினைக் கண்டறிதல்,பொருளாதாரஅபிவிருத்தியில் நுண்பாகநிதிநிறுவனங்களின் பங்களிப்பினை இனங்காணல்,எதிர் கொள்ளும் தடைகளைஅடையாளப்படுத்துதல்,மேலும் மேம்படுத்துவதற்கானவிதந்துரைகளைமுன்வைத்தல் ஆகியதுணைநோக்கங்களினூடாகபிரதான இலக்குஅடையப்பட்டுள்ளது.

### தகவல் சேகரிப்பும் ஆய்வுமுறையும்

இவ்வாய்வானதுஒருசமூக,பொருளாதாரஆய்வாகும். முதலாம், இரண்டாம் நிலைத் தரவு மூலாதாரங்களினைப் பயன்படுத்திஅளவுசார் மற்றும் பண்புசார் ஆய்வு முறைகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வானதுமேற்கொள்ளப்பட்டுள்ளது. முதன்னிலைத் தரவுகள் வினாக்கொத்து,நேர்காணல் ஆகியவற்றின் மூலம் பெறப்பட்டன. குறிப்பாக,இப்பிரதேசத்தில் காணப்படும் முறைசார்ந்தநிதி மூலங்களான இலங்கைவங்கி, சமூர்த்திவங்கி, கூட்டுறவுகிராமியவங்கி போன்ற இடங்களுக்குச்சென்று விடயப்பொருள் குறித்துகலந்துரையாடிதரவுகள் பெறப்பட்டன. மேலும், முறைசாராநிதி மூலங்களான அடகுவைக்கும் இடங்கள்,வட்டிக்குகடன் கொடுப்பவர்கள்,தனியார் நிறுவனங்களின் உதவியுடன் இயங்கிக் கொண்டிருக்கும் நுண்பாகநிதிச் சங்கங்கள் போன்றவற்றின் பிரதிநிதிகளிடமும் விடயப்பொருள் குறித்துகருத்துக்கள்,தரவுகள் பெறப்பட்டன.அத்துடன் அப்பிரதேசமக்களிடம் 100வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டு இவ்வாய்வுக்குத் தேவையானமுதன்னிலைத் தரவுகள் பெறப்பட்டுள்ளன.இவ்வாய்விற்கான இரண்டாம் நிலைத் தரவுகளானது, நூல்கள், அரசதிணைக்களங்களினால் பிரசுரிக்கப்பட்ட புள்ளி விபர அறிக்கைகள்,சஞ்சிகைகள்,பத்திரிகைகள்,கோறளைப்பற்று தெற்குப்பிரதேச செயலகத்தினால் திரட்டப்படும் மாவட்டபுள்ளிவிபரத் திரட்டுக்கள், இணையத்தளம்மற்றும் ஏனைய இலத்திரனியல் ஊடகங்கள் மூலமாகவும் பெறப்பட்டிருக்கின்றன. இத்தரவுகள் எளிய புள்ளிவிபர தரவுப்பகுப்பாய்வு மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

### ஆய்வின் முடிவுகள்

**ஆய்வின் முடிவுகள்**

இவ்வாய்வின் மூலம் கோறளைப்பற்றுதெற்குப்பிரதேசத்தில் மக்களின் நிதித் தேவைகளைஈடு செய்வதற்காகஒருசிலமுறைசார்ந்தநிதி மூலங்களும்,பலமுறைசாராநிதி மூலங்களும் செயற்பட்டுவருகின்றன. அவைகளுள் முறைசார்ந்த மூலங்களாக இலங்கைவங்கி, சமூர்த்திவங்கி, கூட்டுறவுகிராமியவங்கி என்பனசெயற்பட்டுவருகின்றன. முறைசாராதநிதி மூலங்களாகசீட்டுப் பிடித்தல்,அடகுவைத்தல்,வட்டிக்குகடன் வாங்குதல்,வட்டியல்லாக் கடன் பெறுதல் (அரசசார்பற்றநிறுவனங்கள் மூலம் இயங்கும் நுண்பாகநிதிச் சங்கங்கள்) போன்றவற்றைக் குறிப்பிடலாம். இப்பிரதேச பொருளாதார அபிவிருத்தியில் நுண்பாக நிதியிடலானது கணிசமான அளவு முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருந்தாலும் இவை ஒப்பீட்டளவில் குறைவாகவேகாணப்படுகின்றது. இவ்வாய்விற்கிணங்க இப்பிரதேசத்தில் முறைசார்ந்த மூலங்களைவிட,முறைசாரா மூலங்களின் பங்களிப்பானதுஅதிகமாகக் காணப்படுகின்றது. இங்குமுறைசார்ந்தசேமிப்பு,கடன் என்பவற்றின்பங்களிப்பு ஏனைய காரணிகளின் பங்களிப்பைவிடகுறைவாகவேகாணப்படுகின்றது. இதற்கானகாரணம் மக்களின் குறைந்தளவானபங்களிப்புமட்டுமன்றிநிறுவனரீதியானஏற்பாடுகளின் குறைந்தளவானபங்களிப்பும் காரணமாகும்.

இப்பிரதேசமக்கள் நுண்பாகநிதியைப் பெறுவதில் பல்வேறுதடைகள், பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றமையைஅவதானிக்கக் கூடியதாகஉள்ளது. குறைந்தளவானநிதியிடல் நிறுவனங்கள்,குறைந்தளவானகடன் வசதிகள் காணப்படுகின்றமை,நிதிவசதிகள் போதாமல் இருப்பதுடன் கிடைப்பதற்குகாலதாமதம் ஏற்படல்,நிதியைப் பெறுவதில் கட்டுப்பாடுகள் அதிகமாககாணப்படுகின்றமை,முறைசாராதநிறுவனங்களில் கடன்களைப் பெறக்கூடியதாக இருந்தாலும் வட்டிவீதம் உயர்வாகக் காணப்படுகின்றமைஎன்பவற்றைக் குறிப்பிடலாம். இப்பிரதேசத்தை அபிவிருத்தியடையச் செய்யவேண்டுமாயின், நுண்பாகநிதியிடல் அம்சங்கள் குறித்துமக்களுக்கு தெளிவாகவிளக்குவதுடன் அவற்றில் கட்டமைப்புரீதியிலான மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் மக்களை ஊக்குவித்து பொருளாதார ரீதியில் நேர்க்கணிய மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்பதனைமுக்கியதீர்வாக இவ்வாய்வுமுன்வைக்கின்றது.

இலங்கையில் கடந்தசிலஆண்டுகளில் நுண்பாகநிதியிடலின் வளர்ச்சி தீவிரமாகுவதை அவதானிக்கமுடிகின்றது. நுண்பாகநிதியிடலானதுகிராமியத் துறையின் உற்பத்தித் திறன்,வேலைவாய்ப்புஎன்பவற்றைஅதிகரிப்பதற்குரிய இயக்கத்தின் முன்னோடியாக இருத்தல் வேண்டும். இந்த நடவடிக்கை நீண்டகாலத்தில் எமது கிராமங்களில் வாழுகின்ற பெரும்பான்மையானமக்களின் வாழ்க்கைத் தரத்தைஅபிவிருத்திசெய்வதுமாத்திரமின்றிநாட்டின் பொருளாதாரநடவடிக்கைகளின் அபிவிருத்தியுடன் இலாபத்தையும் அதிகரிக்கச் செய்யும் செயற்பாடாகவும் மாறிக் கொண்டுவருவதனைஅவதானிக்கமுடிகின்றது.இத்திட்டங்களில் தனியார் துறையும்,அரசாங்கத் துறையும் ஈடுபடும்போதுமுழுமையானவெற்றிக்கானவாய்ப்புக்கள் கிட்டுமெனலாம்.

## References


Bank of Ceylon (1990-2005), *Development Credit Schemes*, Colombo, Development Banking Division Bank of Ceylon, pp.1-19.

Chandradasa,A.J.M(2004), "What is Micro Finance?", Economic Review, Vol:30, No:9/10,Colombo, Peopl's Bank, Pp 27-30.

SenAmartya (1998), "The welfare Basis of Real Income Comparisons: A Survey", Journal of Economic Literature, Vol: 17 (1), India, Pp 1-45

Wijesinghe,T.M (2004), "Micro Finance an Efficient Tool for poverty Alleviation", Economic Review, Vol:30, No:9/10,Colombo,Peopl's Bank, Pp 23-27.

Michael Todoto, P (2000), *Economic Development*(7th Edition), England, Pearson Education Limited pp. 77-105.

சுமனால.எச் (2000),*சமுர்த்திநிகழ்ச்சித்திட்டம் அதன் அமுலாக்கமும் முன்னேற்றமும் 1995-2000,*பொருளியல் நோக்கு,மலர்:26, இதழ்:8/9,கொழும்பு,பக். 12-16.

மூக்கையா, மா.செ (1995),*அபிவிருத்திக் கல்விக்குஓர் அறிமுகம்,*புவியியற்துறை,பேராதனைப் பல்கலைக்கழக வெளியீடு,பக். 36-85.